## II. ஒன்றியத்து ஆட்சிநிலவரைகள்

| பெயர் (1) | | பரப்பிடம் (2) |
|---|---|---|
| 1. தில்லி | .. | இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டி முன்பு, தில்லித் தலைமை ஆணையர் மாகாணத்தில் அடங்கியிருந்த ஆட்சிநிலவரை. |
| 2. அந்தமான்–நிக்கோபார்த் தீவுகள் | .. | இந்த அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டி முன்பு, அந்தமான் நிக்கோபார்த் தீவுகள் தலைமை ஆணையர் மாகாணத்தில் அடங்கியிருந்த ஆட்சி நிலவரை. |
| 3. இலட்சத் தீவுகள் | .. | 1956 ஆம் ஆண்டு மாநிலங்கள் மறுஅமைப்பு சட்டத்தின் 6 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சி நிலவரைகள். |
| 4. தாத்ரா–நாகர் ஹவேலி | .. | 1961 ஆம் ஆண்டு ஆகஸ்டு பதினோராம் நாளினை ஒட்டிமுன்பு, சுதந்திர தாத்ரா–நாகர் ஹவேலியில் அடங்கியிருந்த ஆட்சிநிலவரை. |
| 5. தமண் மற்றும் டையூ | .. | 1987 ஆம் ஆண்டு கோவா, தமண் மற்றும் டையூ மறுஅமைப்புச் சட்டத்தின் 4 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள். |
| 6. பாண்டிச்சேரி | .. | 1962 ஆம் ஆண்டு ஆகஸ்டு பதினாறாம் நாளினை ஒட்டிமுன்பு, பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி மற்றும் ஏனாம் என வழங்கப்பட்ட இந்தியாவிலுள்ள பிரெஞ்சுக் குடியேற்ற அமைப்புகளில் அடங்கியிருந்த ஆட்சிநிலவரைகள். |
| 7. சண்டிகர் | .. | 1966 ஆம் ஆண்டு பஞ்சாப் மறுஅமைப்புச் சட்டத்தின் 4 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சி நிலவரைகள். |